பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அமைப்பதாக உள்ளது. அதுபோது காஞ்சி மாநகரத்தில் இவ்வித விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

Supply of Milk to Starred Hotels in Madras City

*Q. No.85–THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether the Tamil Nadu Milk Producers Co-operative Federation is supplying Milk for the starred hotels at Madras City;

(b) the quantum of milk being supplied per day; and

(c) the price of the milk?

மாணபுமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) அவற்றிற்கு ஒரு நாளில் 280 லிட்டர் பால்வழங்கப் படுகிறது.

(இ) ஒரு லிட்டருக்கு ரூ. 2. 75 என்ற விலையில் வழங்கப் படுகிறது.

திரு. என் .ஸ்ஸ .வி. சித்தன். மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 280 லிட்டர் என்ற அளவு ஒரு ஓட்டலுக்கா அல்லது மொத்த ஓட்டல்களுக்கும் சேர்த்து சொல்லப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

ம ண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. மாண்புமிகு தலைவர் அவர்களே, 7 நிறுவனங்கள் தங்களுக்குத் தேவை என்று விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்த 7 நிறுவனங்களுக்கு காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளுக்கும் சேர்த்துத்தான் இந்த 280 லிட்டர்.

திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் பால்வள நிறுவனத்திற்கு நேரடியாக இருக்கின்ற வகையில் தமிழகத்திலே பரவலாக பால் அரைக்கும் எந்திரங்களை லைசன்ஸ் பெறாமலேயே வைத்து, பால்வள நிறுவனத்திற்கு எதிராக வியாபாரம் நடத்தப்படுவது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படி உரிமம் இல்லாமல் பால் அரைக்கும் எந்திரங்களை வைத்து வியாபாரம் செய்யப்படுவது தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

உசிலை வட்டத்தில் மணற் காற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்.

*வினா எண் 86—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1981 ஆகஸ்ட் 27]

(அ) மதுரை மாவட்டம் உசிலை வட்டம் சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய கிராமங்களில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் பெருமளவில் மணற்காற்று வீசுவதும், அதனால் ஆயிரக்கணக்கில் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதும் அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் உரிய காற்றுத்தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய பாதிக்கப்பட்ட கிராமங்களில் காற்றுத்தடுப்பு மரச்சாலைகள் (shelter belts) போடப்பட்டுள்ளன. இப்பகுதியில் தற்போது 1658 மீட்டர் நீளம் தடுப்புச் சாலை நிலையாக உள்ளது. மீதம் உள்ள பரப்புகளில் புதிய மரங்கள் நடுதலும், நிலையான பராமரிப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன. உசிலம்பட்டி தாலுக்காவில் உள்ள பாதிக்கப்பட்டுள்ள பரப்புகள் யாவற்றையும், மேற்கண்ட பணிகள் மூலம் சீர்செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய பகுதிகளில் தடுப்பு வேலை நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, உசிலம்பட்டி வட்டமும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், வெள்ளம்-மலைப்பட்டு போன்ற பல கிராமங்களும் இந்தக் காற்றினால் பாதிக்கப்பட்டு, விளைச்சல் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பகுதிகளுக்கும் தடுப்பு நிவாரண வேலைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி, போடிநாயக்கனூர், ஆண்டிப்பட்டி ஆகிய இந்தச் சுற்று வட்டாரங்கள் அனைத்திற்கும் போடிநாயக்கனூரை தலைமை இடமாக வைத்து செயல்பட்டு வருகிறது. அது உசிலம்பட்டி வட்டாரத்தையும் கவனிக்கும்.

வேளாண் தொழில்கள் கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்.

*வினா எண் 87—திரு து. புருஷோத்தமன்:—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

சூரியகாந்தி எண்ணெய் 1978-1979, 1979-1980 ஆம் ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான கழகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தில் 1978–1979, 1979-1980 ஆம் ஆண்டுகளில் முறையே 98.647 மெ. டன், 412.182 மெ. டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது.